மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருக்குப் பதில் சொல்கிறேன். இராதா அவர்கள் கேட்டதற்கு, நான் நடவடிக்கைகள் எடுத்து அவருக்கு எழுத்து மூலம் இன்றைக்குள் தர வேண்டும் என்று அனுப்பி இருக்கிறேன். அவர் இங்கே அவைக்கு எழுத்து மூலம் தரவேண்டுமென்று, இன்றைக்குள் தரவேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தாங்கள் அவருக்கு ஒரு இரகசியக் கடிதம் எழுதியிருப்பதாக ரகுமான்கான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவருக்கு இரகசியமாக கடிதம் எழுதிவிட்டு அதைத் தாங்கள் அவையில் அறிவித்தது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இரகசியம் என்று சொல்லவில்லை. அனுப்பியது என்ன என்று சொல்லவில்லை. அனுப்பியிருக்கிறேன் என்று மட்டும்தான் கூறியிருக்கிறேன். இன்றைக்குள் தர வேண்டும் என்று சொன்னேன். என்ன எழுதினேன் என்று உள்ளே நுழையவில்லை. என் தீர்ப்பையொட்டி அவருக்கு நினைவூட்ட கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, இந்துப் பரீட்சைத் தாள்கள் சம்பந்தமாக காலையில் விதி 42-ன் கீழ் நான் கொடுத்திருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சனையோடு வாருங்கள். ஒன்றைச் சொல்லுங்கள், அதை நின்று சொல்லுங்கள்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: முக்கியமாக வியாசர்பாடியில் நடந்த சம்பவம் மற்றும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக எங்களால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு சந்தர்ப்பங்களில் பேச வாய்ப்பிருக்கிறது என்று சொல்லி தள்ளுபடி செய்கிறீர்கள். இது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விதியின் கீழ் இது சரி இல்லை என்று அவர்கள் சொல்ல முடியும் என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். நீங்கள் கொடுத்திருக்கிற அத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்களும் இன்றைய மானியக்கோரிக்கைக்குள் அடங்கியவை. ஆகவே, நீங்கள் எழுப்பியுள்ளவை அதில் அடங்கும். ஆகவே, தயவு செய்து சரிவர சிந்தித்து அப்பிரச்சனைகள் எல்லாம்பற்றி இன்றைய மானியக் கோரிக்கைமீது பேசுகிறபோது அதில் தாராளமாகப் பேசுங்கள். அமருங்கள்.